ஊழல் வழக்குகளில் சிக்கி அமித்ஷாவின் பாதுகாப்பில் வலம் வரும்

# எடப்பாடி பழனிசாமி, முதல்வர் குறித்து பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?

## கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கை!



**சென்னை, ஏப். 6-**

**ஊழல் வழக்குகளில் சிக்கி அமித்ஷாவின் பாதுகாப்பில் வலம் வரும் எடப்பாடி பழனிசாமி, முதல்வர் குறித்து பேசுவதற்கு அருகதை இருக்கிறதா? என கேட்டு காங்கிரஸ் கமிட்டி தமிழ் மாநிலத் தலைவர் கு.செல்வப் பெருந்தகை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

நடைபெறவுள்ள 2026 சட்டமன்றத் தேர்தலையொட்டி அ.தி.மு.க. பங்கேற்கிற தேசிய ஜனநாயக கூட்டணி அமித்ஷாவின் நிர்ப்பந்தத்தால் அமைந்திருக்கிறது. 2021 சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்த அ.தி.மு.க., 2024 மக்களவை தேர்தலில் கூட்டணி இல்லாமல் போட்டியிட்டது. அப்போது தமிழக பா.ஜ.க. தலைவராக இருந்த அண்ணாமலை, எடப்பாடியை பகிரங்கமாக அரசியல் தற்குறி, ஊழல் பேர்வழி என குற்றம் சாட்டி பேசினார். இத்தகைய பின்னணியில் இன்றைக்கு கூட்டணியின் தலைவராக இருக்கிற எடப்பாடி பழனிச்சாமி, தேர்தல் பிரச்சார கூட்டங்களில் ஆத்திரம் பொங்க, தொண்டை கிழிய உரத்த குரலில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீது ஆதாரமற்ற அவதூறு குற்றச்சாட்டுக்களை நாள்தோறும் கூறி வருகிறார். தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதாக கூறியிருக்கிறார்.

2018 மே மாதம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்பு போராட்டங்களில் பங்கேற்ற அப்பாவி மக்கள் மீது தமிழ்நாடு காவல்துறை வாகனத்தின் மீது ஏறி நின்று கொண்டு கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்த கொடிய சம்பவம் நடைபெற்றது. இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததே எனக்கு தெரியாது, தொலைக்காட்சியை பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என்று பகிரங்கமாக பொறுப்பற்ற முறையில் உள்துறையை வகித்த அன்றைய முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கூறியதை எவரும் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள். இதைவிட தமிழ்நாட்டிற்கு ஒரு அவமானம் இருக்க முடியாது.

**அரசியல் பேராண்மை!**

மேலும், ஊழலைப் பற்றி எடப்பாடி பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதைப் போல இருக்கிறது. தனது உறவினர்களுக்கு ரூபாய் 3500 கோடி மதிப்பிலான நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்தங்களை வழங்கியதற்காக அவர்மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டு சென்னை உயர்நீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு 2018 இல் உத்தரவிட்டது. அதை எதிர்த்து நான்கு ஆண்டுகள் கழித்து 2022 இல் உச்சநீதிமன்றத்திடம் தடையாணை பெறப்பட்டது. அந்த தடையாணையை நீக்குவதற்கு கடந்த 4 ஆண்டுகளாக மத்திய புலனாய்வுத் துறை முயற்சி செய்யவில்லை. இந்த வழக்கை காட்டித் தான், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் மிரட்டப்பட்டு கூட்டணிக்கு எடப்பாடி பணிய வைக்கப்பட்டார். அதேபோல, தேர்தல் பிரமாண பத்திரத்தில் சொத்து மற்றும் படிப்பு குறித்து தவறான தகவல்களை வழங்கியதற்காக அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் ஒன்றிய அரசின் 60 சதவிகித நிதியுதவியில் 11 மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரி கட்டிடங்கள் தேசிய மருத்துவ ஆணையத்தின் விதிமுறைகளுக்கு எதிராக கட்டப்பட்டதால் அதன்மீது சி.பி.ஐ. விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது. இத்தகைய சி.பி.ஐ. விசாரிக்கிற ஊழல் வழக்குகளில் சிக்கி, அமித்ஷாவின் பாதுகாப்பில் வலம் வந்து கொண்டிருக்கிற எடப்பாடி பழனிச்சாமி, அரசியல் பேராண்மையோடு பா.ஜ.க.வை எதிர்த்து வருகிற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பற்றி பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது ?

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பில்லை, பாலியல் குற்ற வழக்குகள் அதிகரித்து விட்டது என அபாண்டமாக குறை கூறுகிறார். ஆனால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக எண்ணிக்கையிலான பெண்கள் வேலைக்கு செல்வதாக புள்ளி விவரங்கள் கூறுகிறது. பெண்களுக்கு எதிராக எந்த குற்றம் நிகழ்ந்தாலும் உடனடியாக காவல்துறை நடவடிக்கை எடுத்து தண்டனை பெற்றுத் தருவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு இருப்பதை தேசிய குற்ற ஆவண காப்பக புள்ளி விவரங்கள் உறுதி செய்கின்றன. எடப்பாடி ஆட்சியில், ஜீரணிக்க முடியாத பெரும் குற்றமாக பொள்ளாச்சியில் பாலியல் குற்றம் நிகழ்ந்தது. பெண்களை ஏமாற்றி, பாலியல் வன்கொடுமைசெய்துஅதைவீடியோ எடுத்து பணம் மற்றும் பாலியல் ரீதியாக மிரட்டி வந்த நிலையில், அந்த குற்றவாளி களுக்கு பாதுகாப்பு கொடுத்த ஆட்சி தான் எடப்பாடியின் அ.தி.மு.க. ஆட்சியாகும். மேலும், சென்னையில் 5 வயது சிறுமி கடத்தப்பட்டதும், கோயம்புத்தூரில் பள்ளி மாணவி கடத்தப்பட்டு கொல்லப்பட்டது உள்ளிட்ட கடத்தல் மற்றும் கொலை வழக்குகள் நிகழ்ந்து மாநிலத்தையே கொந்தளிக்க வைத்ததை எடப்பாடியால் மூடி மறைக்க முடியாது. கல்லூரி பேராசிரியை நிர்மலா தேவி வழக்கு 2018 ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தமிழகத்தையே உலுக்கிய ஒரு முக்கிய பாலியல் வழக்காகும். இந்தப் பின்னணியில் தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லையென்று எடப்பாடி கூறுவது ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யாகும்.

தமிழ்நாட்டில் 2013 இல் குட்கா மற்றும் புகையிலைப் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், அமைச்சர்கள் மற்றும் உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு லஞ்சம் வழங்கப்பட்டு சட்ட விரோதமாக குட்கா விற்பனை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டுகள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எழுந்தன. இந்த வழக்கில் நவம்பர் 2023 இல் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களான சி. விஜயபாஸ்கர் மற்றும் பி.வி. ரமணா ஆகியோரை விசாரிக்க தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அனுமதி அளித்தார். இவ்வழக்கில் சி. விஜயபாஸ்கர் மற்றும் முன்னாள் டி.ஜி.பி. டி.கே. ராஜேந்திரன் உள்ளிட்டோர் வீடுகளில் சி.பி.ஐ. விசாரணை நடத்தி, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஒரு குட்கா வியாபாரியின் டைரியில், அமைச்சர் ஒருவருடன் நடத்தப்பட்ட பேரங்களின் விவரங்கள் கைப்பற்றப்பட்டது குறித்து பரபரப்பாக செய்திகள் வெளிவந்தன. ஆனால், இந்த வழக்கை தற்போது சி.ஐ.பி. மற்றும் அமலாக்கத்துறை ஆகியவை ஜவ்வு போல இழுத்து விசாரித்து வருவது அரசியல் பேர சந்தேகங்களை உறுதி செய்கிறது. இந்த வழக்கை விரைவாக விசாரித்து குற்றவாளிகளை தண்டிப்பதில் ஏற்படுகிற காலதாமதத்திற்கு எடப்பாடி, அமித்ஷா பேரம் தான் காரணம் என்பதை மறுக்க முடியுமா ?

**சசிகலா காலில் விழுந்தவர்!**

முதலமைச்சர் ஜெயலலிதா மறைவிற்குப் பிறகு சட்டப்பேரவையில், அப்போது முதலமைச்சராக இருந்த ஓ. பன்னீர்செல்வம், அன்று எதிர்கட்சித் தலைவராக இருந்த மு.க. ஸ்டாலின் அவர்களைப் பார்த்து சிரித்ததற்காக சசிகலாவினால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அந்த வாய்ப்பை பயன் படுத்தி சசிகலாவின் காலில் விழுந்து அவரது தயவில் முதலமைச்சரானவர் தான் எடப்பாடி பழனிச்சாமி. முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் போல மக்கள் வாக்குகளை பெற்று ஆட்சியில் அமர்ந்தவரல்ல. எடப்பாடி வகித்த முதலமைச்சர் பதவி சசிகலா போட்ட பிச்சையாகும். இத்தகைய அரசியல் பின்னணி கொண்ட எடப்பாடி பழனிச்சாமி பேச்சை ஒருபோதும் தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

எனவே, தி.மு.க. தலைமையிலான, காங்கிரஸ் உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தமிழ்நாட்டு நலன் சார்ந்து செயல்பட்டு வருகிறது. 2021 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கொடுத்த 505 வாக்குறுதிகளில் 405 நிறைவேற்றப்பட்டி ருக்கிறது. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதால் தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்களும் பயனடைந்து மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய வாழ்வாதாரம் உயர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்து இரண்டாவது மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து சாதனைகளை படைத்து வருகிறது. இத்தகைய சாதனைகளை படைத்து தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் மீண்டும் நல்லாட்சி அமைவதை ஆயிரம் அமித்ஷா, எடப்பாடிகள் ஒன்று சேர்ந்து எத்தகைய கூட்டணி அமைத்து போட்டியிட்டாலும் தடுக்க முடியாது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



துறைமுகம் சட்டமன்றத் தொகுதி வார்டு 55 இல் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் பி.கே. சேகர்பாபு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். உடன் பகுதி கழக செயலாளர் எஸ். ராஜசேகர், தேர்தல் பார்வையாளர் இரா.நரேந்திரன், வட்டக் கழக செயலாளர் எஸ்.சத்திய நாராயணன், மாமன்ற உறுப்பினர்கள் எல்.நவீன், தாக வெ பரிமளம், லண்டன் க.முருகன், பி.விஜயகுமார் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

# சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

## தி.மு.க. தலைமையிலான

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து



கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

# தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | நேரம் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 6.4.2026 | மாலை 4.00 மணி | சென்னை தெற்கு | மதுரவாயல் |
| ” | மாலை 5.00 மணி | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| ” | மாலை 7.00 மணி | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் |
| ” | இரவு 8.00 மணி | சென்னை கிழக்கு | திரு.வி.க.நகர் |
| 7.4.2026 | காலை 10.00 மணி | திருவள்ளூர் மேற்கு | திருத்தணி |
| ” | பகல் 12.00 மணி | இராணிப்பேட்டை | சோளிங்கர் |
| ” | மாலை 4.00 மணி | திருவண்ணாமலை வடக்கு | ஆரணி |
| ” | மாலை 6.00 மணி | திருவண்ணாமலை தெற்கு | போளூர் |
| ” | இரவு 8.00 மணி | ” | கலசப்பாக்கம் |
| 8.4.2026 | காலை 10.00 மணி | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் |
| ” | பகல் 12.00 மணி | கள்ளக்குறிச்சி வடக்கு | சங்கராபுரம் |
| ” | மாலை 4.00 மணி | சேலம் கிழக்கு | ஆத்தூர் |
| ” | மாலை 6.00 மணி | சேலம் மத்திய | சேலம் தெற்கு |
| ” | இரவு 8.00 மணி | ” | சேலம் மேற்கு |
| 9.4.2026 | காலை 10.00 மணி | நாமக்கல் கிழக்கு | நாமக்கல் |
| ” | பகல் 12.00 மணி | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| ” | மாலை 4.00 மணி | ஈரோடு மத்திய | பவானி |
| ” | மாலை 6.00 மணி | ஈரோடு தெற்கு | ஈரோடு கிழக்கு |
| ” | மாலை 7.00 மணி | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## செஞ்சி - மயிலம் - திண்டிவனம் தொகுதி

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய தீவிரப் பணியாற்றுவோம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேச்சு!

திண்டிவனம் ஏப் 6 .

செஞ்சி, மயிலம்,திண்டிவனம் தொகுதியில் வேட்பாளர் தளபதி மு. க .ஸ்டாலின் என்று எண்ணி செயல்பட வேண்டும்

செஞ்சி, மைலம், திண்டிவனம் தொகுதியில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி வேட்பாளர்களை விழுப்புரம் மண்டல பொறுப்பாளர் அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அறிமுகம் செய்து பேசினார்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் செஞ்சிசட்டமன்ற தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம். எல் ஏ, மைலம்சட்டமன்ற தொகுதியில் போட்டியிடம் தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் வெங்கடேசன்,திண்டிவனம் சட்ட மன்ற தொகுதியில் போட்டியிடும் வி.சி.க.

வன்னிஅரசு ஆகியோரை அறிமுகம் செய்து வைக்கும் கூட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.ந தலைமை தாங்கினார். மாவட்டப் பொருளாளர் ரமணன் அனைவரையும் வரவேற்றார்.



கூட்டத்தில்விழுப்புரம் மண்டல பொறுப்பாளர் உழவர் நலன் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் எம். ஆர் .கே. பன்னீர்செல்வம் கலந்து கொண்டுசெஞ்சி தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.மயிலம் தொகுதியில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர் வெங்கடேசன்,திண்டிவனம் தொகுதியில் போட்டியிடும் வி.சி.க.வேட்பாளர் வன்னி அரசுஆகியோரை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் விழுப்புரம் எம்.பி. துரை ரவிக்குமார்,தோழமைக் கட்சியின் மாவட்ட நிர்வாகிகள் ரங்கபூபதி, சவுரிராஜன், ராமமூர்த்தி, சுப்பர மணியன், பாபு கோவிந்தராஜ், ஜான் பாஷா, முகமது ஆகது, கமால், அன்பழகன், தி.மு.க. தொகுதி பொறுப்பாளர் ரமணன், மாவட்ட துணைசெயலாளர் ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன்,நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், வி.சி.க. சேரன், திலீபன், உள்ளிட்டமதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் தி.மு.க. நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில்அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசுகையில் தி.மு.க. நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள்செய்ய வேண்டியது நமது உறவினர்கள் யாரைப் பார்த்தாலும் சூரியனுக்கும் கூட்டணி கட்சிக்கும் வாக்களிக்க கேட்க்க வேண்டும். ஊர் கூடி தேர் இழுத்தால் வெற்றி பெறலாம்.அதனால் அனைவரும் பாடுபட வேண்டும். திண்டிவனம் புதிய பேருந்து நிலையத்திற்கு இந்திரா காந்தி பெயரைமனிதாபிமானத்துடன் பெயர் வைத்தவர் தமிழக முதல்வர்.

வாக்காளர்களை சந்தித்து வாக்களிக்க செய்வது நமது கடமை. இந்த தொகுதியின் வேட்ப்பாளர் தளபதி ஸ்டாலின் என்று எண்ணி செயல்பட வேண்டும். 234 தொகுதியிலும் நமது கூட்டணி வெற்றி பெற்று தளபதி மீண்டும் முதல்வராக வேண்டும். ஏழைகளின் சின்னம் பானை என்று அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள். இந்த சின்னத்தில் இரு முறை திருமாவளவன் வெற்றி பெற்றுள்ளார். இதே போன்று வன்னி அரசு வெற்றி பெற வேண்டும்

வரும் போதே ஒரு சிலர் முதல்வர் கனவோடு வருகின்றார்கள். பிளாச் டிக்கெட் விற்றவர்கள், வரி செலுத்தாதவர்கள் நாட்டுக்கு நல்லது செய்வாரா!? மனைவி விவாகரத்து கேட்ட நிலையில் அவருக்கு வீடு கொடுக்காதவர் நல்லவரா? என கேள்வி எழுப்பியஅமைச்சர் எம். ஆர் .கே பன்னீர்செல்வம் விழுப்புரத்தில் இருந்து துரத்தப்பட்ட சி.வி. சண்முகம் மயிலத்தில் நிற்க்கின்றார். அந்த பகுதியில் முரசு சின்னத்தில் போட்டியிடும் வெங்கடேசனை வெற்றி பெற செய்ய வேண்டும்,இதேபோல் செஞ்சி தொகுதியில் போட்டியிடும் மாவட்ட ப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மீண்டும் மூன்றாவது முறையாக வெற்றி பெற வேண்டும்.விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 7 தொகுதியும் திமுக மற்றும் கூட்டணி வெற்றிபெற்று விழுப்புரம் மாவட்டம் தி.மு.க. கோட்டையாக வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

## திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி

# வேட்பாளர் சு.சுப்பிரமணியன் வேட்புமனுத் தாக்கல்!

## மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. – முன்னணியினர் பங்கேற்பு!

நெல்லை, ஏப். 6 –

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திருநெல்வேலி சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் சு.சுப்பிரமணியன் (04042026) அன்று நெல்லை கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அலுவலரிடம் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற தொகுதி வேட்பாளர்மு.அப்துல்வகாப்,திருநெல்வேலி தொகுதி பார்வையாளர் பேச்சி பாண்டியன்,முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி, துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

நெல்லை தொகுதியில் 50, 000ம் வாக்கு வித்தியாசம் வெற்றி பெறுவேன் என்று வேட்பாளர் சு.சுப்பிரமணியன் கூறினார்.

பின்னர் வேட்பாளர் சு.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது.

திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆசியுடன் நெல்லை சட்டமன்ற தொகுதியில் வேட்பு மனுதாக்கல் செய்துள்ளேன்.இந்த சட்டமன்றத் தேர்தலில் 50 ஆயிரம் வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெறுவேன். பா.ஜ.க.வின் மாநில தலைவர் நெல்லை தொகுதியின் எம்.எல்.ஏ. இருக்கும் நயினார்நாகேந்திரன் இந்த தொகுதிக்கு எந்த திட்டத்தையும் செய்யவில்லை.

அதனால் தான் தற்போது இந்த தொகுதியில் இருந்து வேறு தொகுதிக்கு மாறி சென்றுள்ளார்.

இந்த தொகுதிக்கு தேவையான திட்டங்களை செயல்படுத்துவேன். மானூர் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன்.நான் வெற்றி பெற்றதும் மானூர் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியங்களில் எம்.எல்.ஏ.அலுவலகம் திறந்து, மக்களின் குறைகளை கேட்டு உடனடியாக தீர்ப்பேன் என்று கூறினார்.

அப்போது,முன்னாள் அமைச்சரும், மாநில சிறுபான்மை நலப்பிரிவு தலைவருமான டி.பி.எம்.மைதீன் கான்,மாவட்ட அவைத் தலைவர் வி.கே.மேருகன்,தலைமை செயற்குழு உறுப்பினருமான ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.